முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் திருமூலதேவர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

19.09.2018, புதன்கிழமை

1. **காக்கும் சக்தியாக வந்த குருவே**
**கருணை பெருக்காக நின்ற குருவே**
**தாக்கும் கலிமாயை இடரை**
**தகர்த்தெறிய வந்த ஞானியே**

2. ஞானியே ஆறுமுக அரங்கராசனே
ஞாலமதில் உன் பெருமை கூறி
இனிமைபட ஒளி சூட்சும நூலை
இயம்பிடுவேன் **விளம்பி தரிவை திங்கள்**

3. **திங்களிலே சூலதிகதி புந்தி வாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 3ம் நாள் 19.09.2018, புதன்கிழமை)**
**தேசிகனுக்கு திருமூலதேவர் யானும்**
இங்கனமே உலகநலமுற உரைப்பேன்
ஏழாம்படை வீடான தருமவீட்டை மக்கள்

4. மக்களெல்லாம் அணுகி நன்கு
மனபக்குவம் மனோபலம் தரும்
ஆக்கமான தருமப்பணிகள் தன்னில்
அவரவரும் ஈடுபட்டு சேவை ஆற்றிவர

5. ஆற்றிவர ஞானத்தின் முதற்படியான
ஆன்மாவிற்குள் தயவு பெருக்கமாகும்
மாற்றமாக மேலும் ஞானி தரும்
மகா உபதேசம் சைவநெறிமுறை

6. முறையாக மக்களை தேற்றியே
முழுமை ஞானம் பெற உண்டான
நிறைவும் பரிபூரண சக்தியும் தரும்
நிலமதனில் இவ்வித மாற்றமோடு

7. மாற்றமோடு அரங்க மகானை
மானச பூசை பலமாக
ஆற்றல்பட நித்தம் சரவண ஜோதி
அனைவரும் ஏற்றி வழிபாடு செய்து

8. வழிபாடு செய்து கொண்டுமே
வணங்கி மாதாந்திரம் தோறும்
முழுமதி பூசையில் கலந்து நன்கு
மூலமான திருவடி உயர் தீட்சை

9. தீட்சை அடைந்தும் மக்கள்
தொடர்ந்து வழிபாட்டை பெருக்க
மாட்சிமைபட உலக மக்களிடை
மகரிஷிகள் ஞானிகள் நோக்கமான

10. நோக்கமான அழியாமை ஞானசித்தி
நிலைபட வாய்த்து பேரின்பமுடன்
ஊக்கமான ஞான யுகம்
உலகமெங்கும் ஏற்க உருவாகி

11. உருவாகி அற்புதம் நடக்கும்
உலகே அரங்கமகானை ஏற்று
குருவாகி வணங்கும் காலம் கனியும்
கூறிவந்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் திருமூலதேவர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

உலகைக் காக்கும் மகா சக்தியாக வந்துதித்த ஞானகுருவே கருணையே வடிவாகி நின்ற மகா குருவே உலக மக்களை தாக்கி துன்புறுத்தும் கலியுக மாயையை தகர்த்தெறிந்து மக்களை காத்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட மகா ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானகுருவே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 3ம் நாள் 19.09.2018, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே திருமூலதேவர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் திருமூலதேவர்.

உலகினை காத்திடவே உருவாக்கப்பட்ட ஞானவீடாம் ஆற்றலும் அருள்பலமும்மிக்க ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை மக்களெல்லாம் அணுகி நன்கு மனப்பக்குவமும் மனோபலமும் தருகின்ற தருமப்பணிகளை செய்து அவரவரும் ஈடுபாட்டுடன் செய்வதுடன் அவரவரும் தருமப்பணிகளுக்கு தொண்டுகளைச் செய்து வர அவர்க்கெல்லாம் ஞானத்தின் முதற்படியான ஆன்மாவிற்குள் தயவு உணர்வு பெருகிடும்.

அவர்கள் மேன்மேலும் ஞானி அரங்கன் செய்யும் தருமங்களில் உதவி செய்து அரங்கமகானின் அருள் உபதேசங்களை ஏற்று உயிர்க்கொலை தவிர்த்து புலால் மறுத்து சுத்த சைவ உணவினை மேற்கொண்டு நடந்திட வேண்டும். முழுமை ஞானி பெறுவதற்கு தேவையான நிறைவும் பரிபூரண சக்தியும் உலகினில் இந்தவிதமான மாற்றங்களோடு ஆறுமுக அரங்கமகா தேசிகனை மானசீகமாக பூஜைகளை பலமாகச் செய்திட வேண்டும், மானச பூஜையாக மனதிற்குள்ளே இறைவனை வணங்குதலாகும்.

இப்புவியில் இந்தவித மாற்றமோடு ஆறுமுக அரங்கமகா தேசிகனை பூஜைகள் செய்வதுடன் மானச பூஜைகளை பலமாக ஆற்றலுடன் தினம்தினம் சரவணஜோதிதனை ஏற்றி வைத்து வழிபாடுகளை செய்திட வேண்டும்.

ஞானிகளை உணர்ந்து வழிபாடுகளைச் செய்து வணங்கி மாதந்தோறும் பௌர்ணமி பூஜையில் கலந்து சிறப்படைவதுடன் அரங்கனிடத்து “திருவடி தீட்சை” யினை ஏற்று வர வேண்டும்.

தொடர்ந்து வழிபாட்டை பெருக்க மாட்சிமைபட உலக மக்களிடையே பௌர்ணமி பூஜைகளில் கலந்து திருவடி உயர் தீட்சைகளை பெற்று மக்களெல்லாம் தொடர்ந்து அழியாமை எனும் ஞானசித்தியானது நிலைபட வாய்த்து மக்களிடையே மகரிஷிகள், ஞானிகளின் நோக்கமான அழிவிலாமையெனும் ஞானசித்தி நிலைபட வாய்ப்புகள் கிடைத்து நிலைபட வாய்த்து பேரின்பமுடன் ஊக்கமான ஞானயுகம் உலகமெங்கும் மக்கள் மனம் மாறி ஏற்றுக் கொள்ளவும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் திருமூலர்.

–சுபம்–